


# முத்தமிழ்ப் பேரவை



## முத்தமிழ்ப் பேரவை பொன்விழா ஆண்டு
## விருது வழங்கும் விழா

நாள் : (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் : திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலையரங்கில் R.A.புரம் சென்னை - 28

வரவேற்புரை :
இயக்குனர் திரு பி.அமிர்தம் அவர்கள்

கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி விழா சிறப்புரை:
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



முன்னிலை :
திரு. G. ராமானுஜம் அவர்கள்
தலைவர், முத்தமிழ்ப் பேரவை

ஏற்புரை :
புரட்சித்தமிழன் திரு.சத்தியராஜ் அவர்கள்

நன்றியுரை :
மிருதங்கச்செல்வம் சங்கீதகாலநிதி கலைமாமணி
டாக்டர் திருவாரூர் பக்தவத்சலம் அவர்கள்

### விருது பெறும் கலைஞர்கள்

"கலைஞர்" விருது - புரட்சித்தமிழன் திரு.சத்தியராஜ்
"இயல் செல்வம்" விருது - திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி
"ராஜ ரத்னா" விருது - திருப்பாம்புரம் திரு. T.K.S. மீனாட்சி சுந்தரம்
"இசைச்செல்வம்" விருது - முனைவர் காயத்ரி கிரீஷ்
"நாதஸ்வரச்செல்வம்" விருது - திருக்கடையூர் திரு. T.S.M. உமாசங்கர்
"தவில்செல்வம்" விருது - சுவாமிமலை திரு.C.குருநாதன்
"கிராமியக்கலைச்செல்வம்" விருது - முனைவர் தி.சோமசுந்தரம்
"நாட்டியச்செல்வம்" விருது - திருமதி பார்வதி ரவி கண்டசாலா

வருக வருக என வரவேற்கிறோம் !!









துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.11.2024) இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்கியதையொட்டி, நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை முதன்மைச் செயலாளர் சா. விஜயராஜ் குமார், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் உள்ளனர்.



பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (21.11.2024) கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையிலிருந்து சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைத்தள பாலம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ், ராஜேஷ்குமார், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.இரா. செல்வராஜ், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.